**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

E.P.No.07/2022

in

ARC.No.28/2019

ஸ்ரீ ராம் சிட்ஸ் தமிழ்நாடு (பி) லிமிடெட்,
அதற்காக சீட்டு நடத்துனர்,
கோபால சமுத்திரம் கீழவீதி,
ST காம்ப்ளக்ஸ், இந்தியன் வங்கி,
மன்னார்குடி. ..... மனுதாரர்/ D.Hr.

**// எதிர்//**

1. D.அறிவழகன்
2. R.இன்பரசன் ..... எதிர்மனுதாரர்கள்/ JDs

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பொன்னுலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அறிவழகன், B.Sc., L.L.B., அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜங்கம சொத்து ஜாப்தாவில் கண்டுள்ள சொத்துக்களை ஜப்தி செய்து ஏல இஸ்தியார் வகையறாவை ஏற்று

சொத்துக்களை ஏலம் போட்டு தொகைகளை வசூல் செய்து அடைந்து கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 11-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவின் சுருக்கம் :-</u>

இம்மனுவில் எதிர்மனுதாரருக்கு சி.பி.சி.ஆர்டர் 21 ரூல் 43-ன்படி நோட்டீஸ் விட்டு கேட்டும், அதன்படி நோட்டீஸை பெற்றுக்கொண்டு எதிர்மனுதாரர் தொகை ஏதும் செலுத்தி வைக்காதபட்சத்தில் சொத்து விபர ஜாப்தாவில் உள்ள ஜங்கம சொத்துக்களை ஜப்தி செய்து அவைகளுக்கு மதிப்பு ஏற்படுத்தி பின்னர் மனுதாரர்/D.Hr.-ல் தாக்கல் செய்யப்படும் ஏல இஸ்தியார் வகையறாவை ஏற்று சொத்துக்களை ஏலம் போட்டு தொகைகளை வசூல் செய்து கொடுக்கும்படி உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தால் கடந்த 28.08.2025 ம் தேதியன்று ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

4) **இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

5) <u>தீர்வு :-</u>

1. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

2. மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** நிறைவேற்று மனுவினை பரிசீலிக்கும் போது, மனுதாரர் தரப்பில் வழக்கில் கடந்த 11.01.2021-ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி மனுதாரர் தரப்பில் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்து நாளது தேதிவரை மேல் முறையீடு ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததாலும், நீதிமன்றத்தில் வருகை இல்லாததாலும் எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்கள் அடிப்படையில் தீர்ப்பாணை நிறைவேற்றப்படவில்லை. மேலும், அசல் வழக்கில் தீர்ப்பாணையை எதிர்த்து எவ்வித மேல் முறையீடும் செய்யவில்லை என்பதை இந்த நீதிமன்றம் கவனமாக கருத்திற்கொள்கிறது. எனவே, மேற்கண்ட காரணங்களை பொறுத்து இந்த மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

6) **முடிவில், மனுவில் கண்டுள்ள ஜங்கம ஜாபிதாவில் கண்டுள்ள ஜங்கம சொத்துக்களை ஜப்தி செய்து** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. படி செலுத்த ஒரு வாரம்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.02 16:48:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

**இருதரப்பிலும்** : இல்லை

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.02 16:48:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

<u>E.P.No.07/2022</u>

<u>in</u>

<u>ARC.No.28/2019</u>

திருவாரூர் டி.மு. இலாகா மற்றும் தாலுக்கா, கஸ்பா மன்னார்குடி, கோபால சமுத்திரம் கீழவீதி, ST காம்ப்ளக்ஸ், இந்தியன் வங்கி முதல் தளம் என்ற முகவரியில் இயங்கி வரும் ஸ்ரீ ராம் சிட்ஸ் தமிழ்நாடு (பி) லிமிடெட் அதற்காக சீட்டு நடத்துபவர்.

...... மனுதாரர்/ D.Hr.

// எதிர்//

1. திரு. D.அறிவழகன், வயது 57, த/பெ. தெட்சணாமூர்த்தி, இந்து, வசிப்பிடம் 2/205, வடக்கு மேற்கு தெரு, எடமேலையூர் கிராமம், திருவாரூர் டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா.
2. திரு. R.இன்பரசன், வயது 39, த/பெ. ராமசந்திரன், இந்து, வசிப்பிடம் அன்னவாசல் தெரு, A-6. தீயணைப்புத்துறை குடியிருப்பு, கஸ்பா மன்னார்குடி, திருவாரூர் டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா.

..... எதிர்மனுதாரர்/ JDs

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜங்கம சொத்து ஜாப்தாவில் கண்டுள்ள சொத்துக்களை ஜப்தி செய்து ஏல இஸ்தியார் வகையறாவை ஏற்று சொத்துக்களை ஏலம் போட்டு தொகைகளை வசூல் செய்து அடைந்து கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 11-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 24.02.2022

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 25.02.2022

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பொன்னுலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அறிவழகன், B.Sc., L.L.B., அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. **மனுவில் கண்டுள்ள ஜங்கம ஜாபிதாவில் கண்டுள்ள ஜங்கம சொத்துக்களை ஜப்தி செய்து** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. படி செலுத்த ஒரு வாரம்.

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 02-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.02 16:48:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.